★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 17உ திங்கள் (30—1—56) ★ ★ வெளியீடு: தை 18உ செவ்வாய் (31—1—56) [இதழ் 195

'தக்க சமயத்தில்' கவனிப்பார்களாம்!

சென்னை மாநிலத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று சென்னை மாநில சர்க்கார், மத்திய சர்க்காரை வேண்டிக் கொண்டனராம்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, 'தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி தக்க சமயத்தில் கவனிக்கப்படும்' என்று தாக்கீதும் தந்திருக்கின்றனராம், மத்திய சர்க்கார்.

இந்தத் தகவலை மாநிலத் தொழில் அமைச்சர் பக்தவத்சலனார் சென்னை சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

பொது வேலைநிறுத்தம்: பொதுக்குழு ஆதரவு

டெல்லியை எதிர்த்துப் போர் முரசு

தட்சிணப் பிரதேச யோசனைக்கு எதிர்ப்பு

ஆச்சாரியார்-பெரியார்-தி. மு. கழகக் கூட்டு முயற்சிக்குப் பாராட்டு

சிங்கள ஆதிக்கத்திற்குக் கண்டனம்

மே திங்களில் மாநில மாநாடு

சிதம்பரம் பொதுக்குழு முடிவுகள்

சென்னை, ஜன. 30—

'தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பட முடியாது என்று நேரு சர்க்கார் தீர்ப்பளித்திருக்கிறதே—திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்யப் போகிறது? தி. மு. கழக 2-வது மாநில மாநாடு எப்போது நடைபெறப்போகிறது?—எந்தத் திங்களில்? போராட்டங்கள் உருவானால் மாநில மாநாடு நடைபெறுவது எப்படி?'

'இந்தி ஆதிக்க எதிர்ப்பிற்காக ஆச்சாரியார்—பெரியார்—நெடுஞ்செழியன் முதலியோர்கூடி முன்னணி ஒன்று அமைக்கப்போவதாகச் செய்தி வந்ததே, இப்போது நிலை என்ன? முடிவு என்ன?'

'கழகத்திற்கு உறுப்பினர் சேர்க்கும் பணியைத் தீவிரமாக மேற்கொள்ள முடியாதே—புயலும் வெள்ளமும் எங்களை அலைக்கழித்துவிட்டனவே—என்ன செய்வது? கால தவணையைச் சிறிது நீடித்தால் உறுப்பினர் சேர்ப்பதற்கு வசதியாக இருக்குமே?'

'முன்னேற்றக் கழகத்தில் பற்றுக்கொண்ட மாணவர்கள் நிலை என்ன? அவர்கள் எப்போதும் கழகத்திலிருந்து தனித்திருப்பவர்களாகத்தான் இருக்க வேண்டுமா?'

என்றெல்லாம் பொதுமக்களும், கழகத் தோழர்களும், மாணவமணிகளும் எழுப்பிக்கொண்டிருந்த கேள்விகளுக்குத் தி. மு. கழகப் பொதுக்குழு பதிலளித்திருக்கிறது. சிதம்பரத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில், நாட்டையும், கழகத்தையும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைக் குறித்துப் பலமாக விவாதித்துவிட்டு, மகத்தான முடிவுகள் பலவற்றை மேற்கொண்டிருக்கிறது. அந்த முடிவுகளின் விவரம் இங்கு தரப்படுகிறது:—

அனுதாபம்

1. (அ) அண்மையில் தமிழகத்தில் வீசிய புயல் கொடுமையாலும், பெருகிய வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, உயிர்களையும், உடைமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளில் நீங்காப் பற்றுக்கொண்டு, கழகத்திற்கு நல் ஆதரவு நல்கிவந்த திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரிப் பொருளாதாரப் பேராசிரியர் தோழர் இருதயராஜ் அவர்கள், தம் இளம் வயதில் இயற்கையெய்தியமை குறித்து இப்பொதுக்குழு மிக்கத் துயரடைவதோடு, தனது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னார் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) மொகொஞ்சோதாரோ—அரப்பா போன்ற சிந்துவெளியில் புதையுண்ட நகரங்களில் ஆராய்ச்சி நடத்தி, அங்கு வாழ்ந்து அழிந்த நாகரிகம் திராவிட நாகரிகந்தான் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியதோடு, இந்தியா முழுவதிலும் ஒரு காலத்தில் திராவிடநாகரிகந்தான் பரவியிருந்தது என்பதை விளக்கிக் கூறியும், திராவிட நாகரிகந்தான் மத்திய தரைக் கடற்பகுதிக்கெல்லாம் பரவிற்று என்று எடுத்துச் சொல்லியும் திராவிட நாகரிகத்தின் தொன்மையையும் மேன்மையையும் உலகுக்கு உணர்த்திய ஈராசப் பாதிரியார் அண்மையில் இயற்கை எய்தியமை குறித்து இப்பொதுக்குழு மிக்கத் துக்கம் எய்துகிறது.

—தலைவர்

பாராட்டு

2. அண்மையில் ஏற்பட்டப் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, அவதியுறும் மக்களுக்கு ஆறுதல் தரும் வகையில் உணவுப் பொருள், உடை, நிதி ஆகியவைகளைத் திரட்டித் தந்த திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளுக்கும், கலைஞர்களுக்கும், பிற அமைப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் இப்பொதுக்குழு தனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

—தலைவர்

உறுப்பினர் சேர்த்தல்

3. பொதுவாகப் பல தி. மு. கழகக் கிளைகளின் வேண்டுகோளுக்கிணங்கியும், குறிப்பாகப் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கழகக் கிளைகளின் விருப்பத்திற்கிணங்கவும், கழக உறுப்பினர் சேர்க்கும் காலத்தை 29—2—56 வரையில் நீடிப்பதென்று இப்போதுக் குழு தீர்மானிக்கிறது.

—தலைவர்.

மாநில மாநாடு

4. பருவகால நிலையை முன்னிட்டும், மாணவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனை ஒட்டியும், திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டை 1956-ம் ஆண்டு மே திங்கள் 17, 18, 19, 20 ஆகிய நாட்களில் நடத்துவதென்று இப்பொதுக் குழு முடிவு செய்கிறது.

—தலைவர்.

சட்ட திட்டம்

5. தி. மு. கழகச் சட்ட திட்டத்தைத் தேவையான அளவுக்குத் திருத்தம் செய்ய பொதுச்செயலாளரைத் தலைவராகவும், தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட சட்ட திட்டத் திருத்தக் குழு ஒன்றை இப்பொதுக் குழு அமைக்கிறது.

—சி. பி. சிற்றரசு,
—ஜி. பி. சோமசுந்தரம்.

கொள்கை விளக்க நூல்

6. திராவிட முன்னேற்றக் கழக வரலாறும், கொள்கை விளக்

(4-ம் பக்கம் பார்க்க)

தில்லையில் கழக முன்னணி வீரர்கள்

பொதுக் குழுவில் மகத்தான முடிவுகள் மேற்கொண்டனர்

பயன்மிகுந்த விவாதங்கள்; நினைவில் நிற்கும் காட்சிகள்

டில்லி முடிவுக்கு எதிராகத் தாயகத்தில் மகத்தானதோர் எழுச்சி தோன்றியுள்ள முக்கியமான நேரத்தில்தான், திராவிடர் தம் விடுதலைப் படையான தி. மு. கழகத்தின் பொதுக் குழு கூடி, மகத்தான முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ந் தேதிக்குப் பிறகு நேற்று சிதம்பரம் நகரில் கழகப் பொதுக் குழுக் கூட்டம் கூடியது.

மாலைகட்டித் தெருவில் உள்ள சாதுக்கூடக் கட்டிடத்தில் கூட்டம் நடைபெற்றது.

நகரின் முக்கிய வீதிகள் எல்லாம் வரவேற்பு வளைவுகளாலும், தோரணங்களாலும், கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கழகத்தின் இலட்சியங்கள், கொள்கைகள் பொறித்த வளைவுகள், பொதுக் குழுக் கூட்டத்தின் முக்கியத்துவத்தையும், நோக்கத்தையும், சிறப்பையும் விளக்கிக்கொண்டிருந்தன.

நகரில், முதல்நாள் மாலையிலிருந்தே பெரும் பரபரப்பு ஏற்படத் துவங்கிற்று.

பொதுக்குழு முடிவுகளை உடன் தெரிந்துகொள்வதற்காகப் பக்கத்து ஊர்களிலிருந்து மட்டுமின்றி, மாநிலமெங்குமிருந்தும்கூடக் கழகத் தோழர்களும், ஆர்வமுடையோரும் சிதம்பரம் நகரில் கூடிவிட்டிருந்தனர்.

அதிகாலையிலிருந்தே மாநிலத்தின் பல பகுதிகளிலுமிருந்தும் கழக முன்னணி வீரர்கள் பலரும், இதர பொதுக் குழு உறுப்பினர்களும் வந்துசேரத் தொடங்கினர். அவர்கள் பலரும், இரயிலடியிலேயே வரவேற்கப்பட்டு, கழகத் தோழர்களால், கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வந்த தோழர்கள் அனைவரும், பல்வேறு பிரிவினராகப் பிரிந்து, நான்கைந்து பேராய்க் கூடி நின்று பல பிரச்சினைகளைக் குறித்தும் விவாதித்துக்கொண்டிருந்தனர். இங்குமங்கும் சென்று பல மாவட்டத் தோழர்களுடனும் கழக நடவடிக்கைகள், ஆக்கவேலைகள், மாநில மாநாடு இவைபற்றி உற்சாகத்துடன் தோழர்கள் பலரும் உரையாடிக்கொண்டிருந்தது நினைவில் தங்கும் காட்சியாக விளங்கியது.

சுமார் 10 மணி அளவில் அண்ணா அவர்களும், பொதுச் செயலாளரும் இதர முன்னணி வீரர்களும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். அப்போது, தோழர்கள் பெரும் ஆரவாரம் செய்தனர்.

முன்னணி வீரர்கள் பலரும், விவாதிக்கப்படவிருந்த விஷயங்கள் குறித்துக் கலந்தாலோசித்தனர்.

பின்னர், சரியாக 11 மணிக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை ஏற்று, கடந்த பொதுக் குழுக் கூட்டம் முதல் இந்தக் கூட்டம்வரை கழகத்தின் நடவடிக்கைகள், நாட்டு நிலைகள் குறித்து விளக்கம் தந்தார்.

மாநில மாநாட்டிற்கு நிதி சேர்த்தல், மாநில மாநாடு நடத்துதல், புயல் நிவாரண வேலைகளில் ஈடுபடுவது, கழக உறுப்பினர் சேர்த்தல், 'நம் நாடு' வளர்ச்சி நிலை முதலியன குறித்துப் பொதுச் செயலாளர் தந்த விளக்கங்கள் மீது கழகத் தோழர்கள் பலர் கருத்தறிவித்து மேலும் விளக்கம் பெற்றனர்.

பின்னர், அரசியல் நிலைகள் குறித்து நீண்ட விளக்கம் தந்த பொதுச்செயலாளர், அண்மையில் டெல்லியின் எதேச்சாதிகாரப் போக்கு தமிழ் மக்களுக்கு மாநிலப் புது அமைப்பு விஷயத்தில் இழைத்துள்ள அநீதியை எதிர்த்துப் போரிட அமைக்கப்பட்டுள்ள சகல கட்சிக் குழு பற்றியும், அதன் அமைப்பிற்காக நடைபெற்ற மாநாட்டில் தானும், மற்றும் அண்ணா, நடராசன் ஆகியோரும் கலந்துகொண்டது பற்றியும் விளக்கிக் கூறினார்கள்.

பொதுச்செயலாளர் அறிவித்தக் கருத்துக்களின்மீது தோழர்கள் மதுரை எஸ். முத்து, முகவை ஆர். எஸ். பாண்டியன், இளம்பரிதி, ஆர். டி. அரசு, கண்ணதாசன், கே. டி. எஸ். மணி, இராசமாணிக்கம், என். எஸ். இளங்கோமூர்த்தி, குருசாமி, முல்லை-சத்தி, உசேன், சாம்பசிவம், அன்பில்-தர்மலிங்கம், ஜி. பி. சோமசுந்தரம், தோழியர் சத்தியவாணிமுத்து, ஈ. வெ. கி. சம்பத், கி. மனோகரன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் கருத்துக்களை எடுத்துரைத்தனர். கழக நடவடிக்கைகள் குறித்தும், அரசியல் நிலைகள் குறித்தும் உணர்ச்சிமிக்க சிறப்பான விவாதம் நடைபெற்றது.

அடுத்து, அண்ணா அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு சீரியதோர் கருத்துரை வழங்கினார்கள்.

வேறெப்போதுமில்லாத வகையில், இம்முறை பொதுக் குழுக் கூட்டம் தோழர்களுக்கு மிக்கப் பயன்தரத்தக்கதாய் — வழிகாட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 30—1—'56 திங்கள்

வாரீர்! உரிமைகாக்க—போரிட!

தமிழக அரசியல் வரலாற்றில் பெருமைக்குரிய இடம்பெறப் போகும் புதியதோர் கட்டம்—பொன்னான நிகழ்ச்சி பூத்திருக்கிறது. தமிழர்கள் புதிய நம்பிக்கை பெறுகிறார்கள்.

தாயகத்தில் உள்ள பல்வேறு அரசியல் கட்சியினரும், கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட்டிருக்கிறார்கள் ஒரு பெரும் சாதனைக்காக! நல்லோர் பலரின் நெடுநாளைய ஆசை உருப்பெற்றிருக்கிறது! தமிழர்களது நியாயமான உரிமைகளை நிலைநாட்டக் கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது முதன் முதலாக.

'தேவிகுளம், பீர்மேடு, தமிழர் பெரும்பான்மையினராக வாழும் இதர தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும்' என்று எல்லாக் கட்சியினரும் சொல்கிறார்கள். தமிழகத்திற்கு அந்தப் பகுதிகளைத்தர டில்லி மறுக்கிறது; 'அநீதி' என்று ஒப்புக்கொள்கின்றனர், அத்தனை அரசியல் கட்சியினரும்!

'பின் ஏன், தமிழர்களது நியாயமான உரிமையை நிலைநாட்ட டில்லியை எதிர்த்துப் போரிட்டு, எதேச்சாதிகார முடிவை மாற்ற இவர்கள் அனைவரும் ஒன்றுபடக்கூடாது? ஒன்றுபட்டால் — கூட்டு முயற்சி செய்தால் முடியாததா நியாயத்தைப் பெற?' என்று கேட்டனர், விபரமறிந்தோர்—விழிப்புப் பெற்றோர் தமிழகத்தில்; அவர்களது கேள்விக்கு விடை கிடைத்திருக்கிறது.

டெல்லி ஏகாதிபத்தியவாதிகள் தமிழகத்திற்கு அநீதி இழைக்கும் அறிவிப்புக்கேட்டதும் எவரின் தூண்டுதலுமின்றி எழுந்து நின்று, ஊர்வலமாக ஒன்றுபட்டு, கண்டனம் முழக்கி, நியாயம் கோரி ஆர்ப்பாட்டம் செய்தபோது மாணவர் சமுதாயம், 'தலைவர்களே, வாரீர்! தமிழகத்தின் உரிமையைப் பெற்றுத் தாரீர்! டெல்லியை எதிர்த்துப் போரிட ஒன்று சேரீர்!' என்று கொடுத்த குரல், கோரிய பலனைத் தந்துவிட்டது.

'நேரத்திற்கு ஒன்று நினைப்போம்; அந்த நினைப்பு நேர்மையற்றதானாலும், நீதிக்குச் சவக்குழிதோண்டுவதானாலும் அதனைச் சட்டமாக்குவோம்; வேளைக்கு ஒன்று விரும்புவோம்; அந்த விருப்பம், எவரது உரிமையைப் பறிப்பதானாலும்—நியாயத்தைக் கொல்லுவதானாலும் அதனைத் திட்டமாக்குவோம்,' என்ற எதேச்சாதிகாரப் போக்கில் நடந்துகொள்ளும் 'டில்லிப் பெரிய மனிதர்'களுக்கு அறைகூவல் தரப்பட்டிருக்கிறது, தமிழகத்திலிருந்து!

நீதிக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, மக்கள் சோஷலிஸ்டுக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் இதர அமைப்புகள் ஆகியவற்றின் தலைவர்கள் ஒன்றுகூடி, மாநிலப் புது அமைப்பு விவகாரத்தில் டில்லி ஆட்சியினர் தங்களது எதேச்சாதிகார முடிவைத் தமிழர்கள் தலையில் கட்ட நினைக்கும் போக்கை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பியிருக்கின்றனர்.

தாயகத்தின் நியாயமான உரிமைகள் பறிபோகாமல் பாதுகாக்கப்படுவதற்கு நெருக்கடியான நேரத்தில் எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டிருப்பது நல்லோர் அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்கொள்ளப்பட்டிருக்கும் கூட்டு முயற்சியில் கலந்துகொள்ளாதுபோன ஒருசில கட்சிகள், உருவாகியுள்ள ஒன்றுபட்ட அமைப்பைக் கண்ட பிறகு உண்மையில் வருந்துவார்கள்தான்; அவர்கள், தாங்கள் கலந்துகொள்ளவில்லை என்பதற்காக, இப்படி ஒரு ஒன்றுபட்ட அமைப்பை எதிர்க்க வேண்டும் என்று நினைக்கமாட்டார்கள் எனவும் மக்கள் திடமாக நம்புகிறார்கள்.

முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் கூட்டு முயற்சி வெற்றி பெறுவது, தமிழ்மக்களின் எதிர்கால வாழ்வைச் செம்மையுறச் செய்வதற்கு—மேலும் தொடர்ந்து பலரும் கூட்டாகப் பணியாற்றுவதற்கு ஊக்குவிக்கக்கூடிய முன்மாதிரியாக விளங்கவேண்டும் என்றும் பல கட்சிப்பற்றற்றவர்கள் ஆசைப்படுகின்றனர்.

கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பல அரசியல் கட்சியினரும், மொழி வழியாக மாநில எல்லைகள் அமைய வேண்டும் என்ற கொள்கைக்காக ஒன்றுபட்டுள்ளனர்.

அந்த அடிப்படையை, தன்னிச்சையான காரணங்களுக்காக ஏற்க மறுக்கும் 'டில்லிப் பெரிய மனிதர்'களுக்கு நியாயத்தை இடித்துரைத்து நீதியை நிலைநாட்டுவதற்கு, தனித்தனியாகப் போராடுவதைவிட, பலரும் தங்கள் ஆற்றலை ஒன்றுகூட்டி, இலக்கறிந்து குறிவைத்துப் போராடுவது பயன் மிகுந்ததாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

'பிப்ரவரித் திங்கள் இருபதாம் நாள் தமிழகம் போர்க்கோலம் பூண்டு நிற்க வேண்டும்; நாடெங்கும் பொது வேலை நிறுத்தம் நடைபெற வேண்டும்; கல்லூரிகள், பள்ளிகள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், வணிக நிலையங்கள், சிறுசிறு கடைகள், உணவு விடுதிகள் எல்லாம் மூடப்பட வேண்டும்; போக்குவரத்துக்கள் எல்லாம் செயலற்றுப் போகவேண்டும்'—என்று, சர்வ கட்சியினரும் அடங்கிய செயற் குழுவினர் அறிவித்துள்ளனர். தமிழகம் அன்று தனது எழுச்சியைக் காட்டிக்கொள்ளப்போகிறது.

அன்றைய நடவடிக்கைகள் அனைத்தும் வெகு அமைதியாக, பலாத்காரத்திற்குத் துளியும் இடமின்றி, சர்க்காரோ அன்றி வேறெவரோ எத்தனைதான் தூண்டினாலும் சற்றும் பொறுமை இழக்காமல் நடைபெறவேண்டும் என்பதையும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மறந்துவிடக்கூடாது.

செயற்குழுவின் தலைவராக சட்டம் படித்தவரும், அரசியல் அனுபவம் மிக்கவரும், அமைதியில் நாட்டங்கொண்டவரும், சர்வகட்சியினராலும் மதிக்கப்படுபவருமான நீதிக் கட்சித் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைவராக அமர்ந்திருக்கிறார். நீண்ட நாட்களாகவே தமிழகஎல்லைக்காகக் குரல் கொடுத்துவருபவரான தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், குழுவின் செயலாளராக உள்ளார்; அவருக்குத் துணையாக நமது தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன், கம்யூனிஸ்டு கட்சித் தலைவரான தோழர் ப. ஜீவானந்தம், சோஷலிஸ்டு கட்சி தலைவர் தோழர் எஸ்.சி.சி. அந்தோணி பிள்ளை, மக்கள் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் தோழர் சுப்பிரமணியம் ஆகிய நான்கு பேர்களும் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். மற்றும், எல்லாக் கட்சியின் அமைப்புகள், சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்; செயற்குழுவின் பொருளாளராகத் தோழர் உமாபதி தேர்வு பெற்றிருக்கிறார்.

பலரின் இந்தக் கூட்டு முயற்சி 'டில்லி 'பெரியமனிதர்'களின் ஆணவத்தை இடுப்பொடித்து, அநியாயத் தீர்ப்பை உருக்குலைத்து, தமிழ் மக்களின் எல்லை உரிமைகள் நிலைநாட்டப்படுவதற்கு நிச்சயம் போதுமான ஆற்றல் பெற்றது என்றே நம்புகிறோம்.

அறப்போர்ப் பறை ஒலித்துவிட்டது; முரசு அறைந்தாகிவிட்டது; போர்க் கொடி ஆடிப் பறக்கிறது; குரல் கேட்கிறது, சங்கநாதமாக! தமிழகம் ஒருடலாய் எழுந்து நிற்கிறது உரிமைப் போர்க்களத்தில்!

தமிழர்களே, தாயகத்தோரே! குனிந்து கிடந்தது போதும்—நிமிர்ந்து நோக்குவீர்! பொறுத்தது போதும்—பொங்கி எழுவீர்! போர்க் குரலுக்குச் செவிசாய்த்துக் களம்புகுந்து புகழ்தேடுவீர்! உரிமை நாடுவீர்! வாழ்வு பெறுவீர்! வாரீர்!!—என்று அழைக்கிறோம்.

'ஏமாற்றம் ஏற்பட்டால் போராடுவோம்'

பஞ்சாபியை ஆட்சி மொழியாக்க காங்கிரஸ் மேலிடத் திட்டம்

மாஸ்டர் தாராசிங் தகவல்

புதுடில்லி, ஜன. 27—

மாநிலப் புதுஅமைப்புத்திட்டத்தை ஒட்டி பஞ்சாப் மாநிலத்தின் எதிர்கால உருவத்தைநிர்ணயிப்பதற்காகக் காங்கிரஸ் மேலிடத்தவர், அகாலிதளத்தவரை அழைத்து நடத்துகிற பேச்சுவார்த்தைகளில் முடிவேதும் ஏற்படவில்லை என்பது மட்டுமின்றி, ஏற்கனவே இருந்த பிளவுகள் அதிகரித்திருப்பதாகவே கூறப்படுகிறது.

பஞ்சாப் மாநிலத்தின் மொழி பற்றிய எல்லாச் சிக்கல்களும், மேலிடத்தவர்—அகாலியர் பேச்சுவார்த்தைகளின்போது விவாதிக்கப்பட்டிருக்கிறது என்பதாகவும், தங்கள் பழைய கொள்கையிலிருந்து விலகி வர அகாலியர் கண்டிப்பாக மறுப்பதாகவும் கூறப்படுகிறது.

பஞ்சாபி மொழியை மட்டுமே பஞ்சாபின் ஆட்சி மொழியாக ஆக்கவேண்டும் என்ற திட்டத்தை காங்கிரஸ் கட்சியினர் வெளியிட்டதாகக் கூறப்பட்டதை ஒட்டி மேலும் தகராறுகள் எழக்கூடும் என்று கூறப்படுகிறது.

அப்படி ஒரு திட்டத்தை காங்கிரஸ் மேலிடத்தின் மாநிலப் புது அமைப்புத் திட்டத் துணைக் குழுவினர் சார்பில் எவரும் முன்வைக்கவில்லை என்றும், அகாலிதளத்தவர் மட்டும்தான் அத்தகு ஒரு திட்டத்தை முன்வைத்ததாகவும் கூறப்படுகிறது.

தாராசிங் அறிவிப்பு

அமிர்தசரஸ், ஜன. 27—

புதிய பஞ்சாப் மாநிலத்தின் ஆட்சி மொழியாக பஞ்சாபி மட்டுமே இருக்கும் என்றும், இந்தி வெறும் தேசீய மொழி என்ற நிலையில்தான் மதிக்கப்படும் என்றும் பொருள்படும் வகையில் காங்கிரஸ் மேலிடத்தவர் அகாலியரிடத்தில் திட்டம் தந்திருப்பதாக மாஸ்டர் தாராசிங் தெரிவித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

அகாலியர் விருப்பம்போலவே பஞ்சாப் சிக்கலுக்குப் பரிகாரம் கிடைக்கும் என்று தான் பாதி நம்புவதாகவும் தாராசிங் கூறினாராம்.

அகாலி தளத்தவர் தந்த திட்டங்களைச் சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் தாராசிங் கூறினார்.

காங்கிரஸ் கட்சி மாநாடு அமிர்தசரசில் பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் நடைபெறுவதற்கு முன்பு பஞ்சாப் பிரச்சினைக்கு முடிவு கூறப்படும் என்றும், தன்னை மேலிடத்தவர் பிப்ரவரி முதல் வாரத்திலேயே சந்தித்து விவாதிப்பர் என்றும் தாராசிங் கூறியதாகத் தெரிகிறது.

அகாலியர் எதிர்பார்ப்பதற்கு மாறாகத் தீர்ப்பு இருக்குமானால் பெரியதொரு கிளர்ச்சி நடத்தப்படும் என்றும், கிளர்ச்சி அமைதியாக—பலாத்காரம் துளியுமின்றி அகாலி தளத்தால் நடத்தப்படும் என்றும், பஞ்சாபி மொழி மாநிலம் அமையாத வரை அகாலியர் ஓயமாட்டார்கள் என்றும் தாராசிங் தெளிவாகத் தெரிவித்துவிட்டாராம்.

ஒப்புக்காக ஒப்பாரி வைக்கின்றனராம்!

தமிழரசுக் கழகத்தவர் மீது சுப்பிரமணியம் வசைமாரி

சென்னை, ஜன. 28—

டில்லியின் தீர்ப்பை எதிர்த்து தனக்குமுன் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்த தமிழரசுக் கழகத் தோழர்களை மந்திரி சுப்பிரமணியம் வசை மொழிகளால் அர்ச்சித்திருக்கிறார்.

"யாரேனும் ஒருவர் இறந்துபட்டால் அப்போது சிலர், ஒப்புக்காக ஒப்பாரி வைப்பார்கள்—உரத்த குரலில்; அதுபோன்றவர்களே இந்தத் தமிழரசுக் கழகத்தவர். இறந்தவரைக் குறித்து உண்மையிலேயே வருந்துபவர்கள் கூச்சல் போட்டு அழமாட்டார்கள்; அமைதியாக உட்கார்ந்து, எதிர்காலத்தில் என்ன செய்வது என்ற ஆச்சரியத்தில் ஆழ்ந்து கிடப்பார்கள். எனவே, தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் கிடைக்காததற்காகத் தமிழரசுக் கழகத்தவர்தான் உண்மையில் வருந்துபவர்கள் என்று மக்கள் நம்புவார்கள் என எண்ண வேண்டாம்" என்று அவர் கூறினாராம்!

மேலும் பேசிய அவர், 'தமிழையும், தமிழரையும் பெரிதும் நேசிப்பவர்கள் என்று கூறிக்கொள்பவர்களுக்கு அறைகூவிச் சொல்கிறேன் மந்திரி என்ற நிலையில் என்னைவிட எவராவது இவ்வளவு திறமையாக, தமிழர்களது நலன்களுக்காகப் போராடியிருக்க முடியுமா?' என்றும் வீராப்புப் பேசினாராம்!

குடியரசு தின விழாவை ஒட்டி திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோவில் முன்பாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அந்தக் 'கனம்' இப்படிப் பேசினாராம்.

அவர் பேசிக்கொண்டிருக்கும் போது தமிழரசுக் கழகத் தோழர்கள் சிலர் கறுப்புக்கொடிகளைக் காட்டி 'சுப்பிரமணியம் பதவியிலிருந்து விலகிவிட வேண்டும்' என்றும், 'தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கே வேண்டும்' என்றும் ஒலி எழுப்பினராம்.

நிலக்கரி உற்பத்தி அளவு அதிகரிக்கிறது

இந்தியாவில் 1955-ம் ஆண்டில் உற்பத்தியான நிலக்கரியின் மொத்த அளவு 3.8 கோடி டன்னுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்படுகிறது. இது, 1950-ம் ஆண்டின் உற்பத்தியைக் காட்டிலும் 60 இலட்சம் டன் அதிகமாகும்.

வேலையின்மையை போக்கும் தனித் திட்டங்கள் ஒத்திவைக்கப்படும்

திரு-கொச்சியின் திட்டம் உறங்கச் செல்லும்

திருவனந்தபுரம், ஜன. 27—

திட்டக் குழுவினர் மாநிலங்களிடமிருந்து கேட்டுப் பெற்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாத எல்லா தனித் திட்டங்களும்—படித்தவரிடை வேலையின்மையைப் போக்குவதற்கான திட்டங்கள் உட்பட நிதிக் குறைவின் காரணமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகிறது.

திரு-கொச்சி சர்க்கார், மாநிலத்தில் படித்தவரிடை நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கெனத் தயாரித்து அனுப்பியிருந்த திட்டமும் கைவிடப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்தத் திட்டம் மாநிலத்தின் இரண்டாம் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தாலன்றி அவை இப்போது அமுல் செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாதாம்.

இந்த முடிவு அண்மையில் கூடிய தேசீய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாம்.

கைத்தறித் துணி விற்பனைக் கழிவு

இந்திய சர்க்கார் முடிவு

பம்பாய், ஜன. 27—

இந்தியா முழுமையிலும் கைத்தறித் துணி 'ரிபேட்' சம்பந்தமாக, மொத்த—சில்லரை விற்பனைகளுக்கிடையே இருந்த வித்தியாசத்தை நீக்க அகில இந்திய கைத்தறிக் குழு செய்திருந்த சிபாரிசை யொட்டி, இந்திய சர்க்காரும் முடிவு செய்துள்ளனர்.

பம்பாய் மாநிலத்தில் மட்டும் கைத்தறித் துணி மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும் கழிவுத் தொகை (ரிபேட்), ரூபாய்க்கு 2 அணுவாக இருக்கும் என்றும், இதர மாநிலங்களில் எல்லாம் இத்தொகை 1½ அணுவாக இருக்கும் என்றும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

இந்த புது 'ரிபேட்' முறையை எப்போது அமுல் செய்வது என்பதுபற்றிய முடிவு செய்வது மாநில சர்க்கார்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளதாம்.

எம். ஜி. ராமச்சந்திரன் அன்பளிப்பு

துணை நடிகர் சங்கக் கட்டிடத்திற்கு நிலம்

22—1—56 பிற்பகல் 3 மணியளவில், துணை நடிகர் சங்கப் பேரவைக் கூட்டம் துவங்கியது. கூட்டத்திற்கு, தோழர் எம். ஜி இராமச்சந்திரன், டைரக்டர் கே சுப்பிரமணியம், மற்றும் சுமார் 400 உறுப்பினர்களும் வருகை தந்தனர்.

தோழர்கள் தூயமணி, பி. குப்புசாமி ஆகியோர் முன்மொழியவும், வழிமொழியவும், தோழர் எம். ஜி இராமச்சந்திரன் தலைமை தாங்கினர். தோழர்கள் எம். ஜி இராமச்சந்திரன், கே. சுப்பிரமணியம் ஆகியோர் சங்கத்தின் சட்ட திட்டங்களை உருவாக்குவது பற்றியும், நடிகர்கள் எவ்வாறு ஒற்றுமையுடன் நடந்துகொள்வது என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்

துணை நடிகர் சங்கத்தின் கட்டிடத்திற்காக, தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஒரு 'கிரவுண்ட்' (மனை) நிலமும், ரூ. 101 நன்கொடையும் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

புயல் நிதிக்கு அன்பளிப்பு

26—1—56 காலை 10 மணிக்கு புயல் வெள்ள நிவாரண நிதிக்காக, திரு வி. க. மறுமலர்ச்சி மன்றச் சார்பில், சென்னை பெரம்பூர் மகாலட்சுமி தியேட்டரில் தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் 'நிரபராதி' தமிழ்த் திரைப்படம் காண்பிக்கப்பட்டது அதன் மூலம் வசூலான தொகையில்: செலவு போக 200 வெண் பொற்காசுகளை, சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி முன்னிலையில் தோழர் தாமரைச்செல்வன் தோழர் என். வி. நடராசன் அவர்களிடம் அளித்தார். (ந-தி.)

சென்னை அரசாங்க அச்சக தொழிலாளர் சங்கம்

22—1—56 காலை 9 மணிக்கு, மேற்படி சங்கப் பொதுக் குழுக் கூட்டம் தோழர் டி. புருஷோத்தமம் எம். எல். சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் நடைபெற்றத் தேர்தலில் தோழர் டி. புருஷோத்தமம் அவர்கள் சங்கத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர் தமது முடிவுரையில், தொழிலாளரிடையேயுள்ள குறைகளைத் தாம் தீர்த்துவைத்து, அவர்களுக்கு ஆவன செய்வதாக உறுதி கூறினர். சங்க அமைச்சர் தோழர் இராமானுசம் நன்றி நவிலக் கூட்டம் முடிவுற்றது.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

'தைப் பொங்கலன்று திராவிடர் திருநாள் கொண்டாடுவீர். என்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தந்திருந்த அறிக்கைக்கு ஒப்ப, நாடெங்கும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் வெகு சிறப்பாக விழாக் கொண்டாடியிருக்கின்றனர்.

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கல், எளியோருக்கு உணவளித்தல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், சிறப்புக் கூட்டங்கள் கூட்டுதல், இசை அரங்கம்-நாடகம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் விழாக்கள் நடைபெற்ற விபரங்கள் இங்கு சுருக்கித்தரப்பட்டுள்ளன :—

சேலம் நகரத்தில்......

14—1—56 காலை 10 மணிக்கு, அம்மாப்பேட்டை அய்யாசாமி பூங்காவிலிருந்து இசை முழக்கங்களுடன் ஊர்வலம் புறப்பட்டு, 21, 22-வது வட்டங்களில், தோழர் க. அன்பழகன் அவர்களால் 10 தெருக்களில் கொடியேற்றி வைக்கப்பட்டது. தெருக்கள் தோறும் தோரணங்கள் கட்டிப் பந்தல்களும் போடப்பட்டிருந்தன. சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன. 11 மணிக்கு, மாரிமுத்து முதலி தெருவில் தோழர் ஈ. ஏ. ஆர். இருளப்பன் நினைவுப் படிப்பகத் துவக்க விழா, தோழர் எஸ். என். எல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. அண்ணா, நெடுஞ்செழியன், ஈ. ஏ ஆர். இருளப்பன் ஆகியோர் உருவப் படங்களைத் தோழர்கள் அன்புக்கரசு, சுப்பிரமணியம், ஈ. ஆர் கிருஷ்ணன் ஆகியோர் திறந்து வைத்தனர். தோழர் க. அன்பழகன் படிப்பகத்தைத் திறந்துவைத்துப் பேசினர்.

அன்று மாலை 5 மணிக்கு, சேலம் கல்லூரியில் தமிழ் கழகத்தின் சார்பில் திரு. பாவாணர் தலைமையில், 'தமிழர் பண்பாடு' குறித்தும், 'தமிழ் வளர்ச்சி' குறித்தும் தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் ஏராளமான மாணவ, மாணவிகளும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

மாலை 7½ மணிக்கு, அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில் தோழர் எ. குள்ளப்பன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் க. அன்பழகன், சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

15—1—56 காலை 10 மணிக்கு, 7-வது வட்டம் தெய்வநாயகம் பிள்ளை தெருவில், கிளைக் கழக ஆண்டு விழாக் கூட்டம் தோழர் எஸ். நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கழகக் கொடியேற்றினர். தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

அன்று மாலை 6-30 மணிக்கு, மேற்படி இடத்தில், தோழர் ஈ ஆர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் ப. உ. சண்முகம் சிறிது நேரம் பேசினதும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல் குறித்து நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

16—1—56 இரவு 9 மணிக்கு, செவ்வாய்ப்பேட்டை 7-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் நாகூர் அனீபா குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியில் தோழர் அனீபா அவர்களையும், குழுவினரையும் பாராட்டி தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் பேசினர்.

சேலம் குகைலயன் ரோடிற்கு அருகாமையிலுள்ள பச்சி அம்மன் கோயில் தெருவிலுள்ள 'பொங்கல் விழாக் குழு'வினரால், 14, 15, 16 ஆகிய மூன்று நாட்களிலும் சிறப்பாக விழா கொண்டாடப்பட்டது 14—1—56-ல் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. சிறுவர்—சிறுமிகளுக்குக் கரும்பு வழங்கப்பட்டது. 16—1—56-ல் கிராமீய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சேலம் 16-வது வட்டம் புத்து மாரியம்மன் கோவில்தெருவில், தி. மு.க. சார்பில் விழா கொண்டாடப்பட்டது. கழக இல்லத்தில் அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. தோழர்கள் பலர் பொங்கல் விழா பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

மல்லியக்கரை

16—1—56 மாலை 6 மணிக்கு, மந்தைவெளி மைதானத்தில் தோழர் பி. எம். ரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வ. எஸ். இராமச்சந்திரன், ஞானசேகரன், சேரலாதன், எம். ஆர். கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பிச்சனூர்

15—1—56ல், குடியேற்றம் பிச்சனூர் பகுத்தறிவு இளைஞர் மன்றத்தின் முன்னர், தோழர் கே. ஜி இராசன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. பல போட்டிப் பந்தய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

ஆனையாம்பட்டி

14—1—56 மாலை 4 மணிக்கு, தோழர் ஆர். மாரிமுத்து தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. தோழர்கள் டி. ஆர். மாரியப்பா, கே லோகநாதன் ஆகியோரது கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாலை 7 மணிக்கு, சாவடிக்கு முன்பாக, தோழியர் அகிலாண்டம் அம்மையார் தலைமையில் தோழர்கள் எஸ். எம். வி. கிரி, ஆர். வெங்கட்ராமன், டி. ஆர். மாரியப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சாத்தான்குளம்

19—1—56 இரவு 7 மணிக்கு, சாத்தான்குளம் காந்தி மைதானத்தில், திராவிடர் திருநாள் விழாவும், கிளைக் கழக 3-வது ஆண்டு விழாவும், தோழர் இரா. நல்லவேல் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. சேர்மத்துரை, ஆ மி. அலிசேக் மன்சூர் ஆகியோர் பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

மேலப்பாளையம்

14—1—56 மாலை, கிளைக் கழகச் சார்பில், குரிச்சியில் விழாக் கூட்டம், தோழர் சுப்பையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர் இறுதியில் தோழர்களுக்கு சிற்றுண்டி விருந்தும் அளிக்கப்பட்டது.

வடுகப்பட்டி

15—1—56ல், சோழவந்தான் வட்டாரத்தைச் சேர்ந்த வடுகப்பட்டியில் தோழர் உ. ரா. கன்னையா தலைமையில் விழா நடைபெற்றது. விழாவையொட்டி, பல விளையாட்டுப் போட்டிகளும், மாறுவேடப் போட்டிகளும் நடைபெற்றுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. தோழர் அண்ணாதாசன் கழகக் கொடியேற்றினர். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

மம்சாபுரம்

மம்சாபுரம் தி. மு. கழகச், சார்பில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பகுத்தறிவுப் படிப்பகத்தின் முன் தோழர் எ. பி. காலசாமி தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மா. இராமலிங்கம், பால்சாமி, பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் எல்லோருக்கும் பொங்கலும் கரும்பும் வழங்கப்பட்டது. இன்னிசையும் நடைபெற்றது.

உடன்குடி

உடன்குடி அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியின் இலக்கியக் கழகத்தின் சார்பில் 22—1—56ல் பொங்கல் விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது. அன்று மாலை ஜனாப் ஈ. கே. எம். ஷேக்தாவூது தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் சண்முகம், குலசேகரன் 'தமிழரது வரலாற்றுத் தொன்மையையும், நாகரீகத்தின் சிறப்பையும் அறிவின் வெற்றியையும், உழைப்பின் மேன்மையையும் உரைக்கின்ற விழாவாதலால்தான், தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இந்தப் பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றனர்' என்று குறிப்பிட்டுப் பேசினர்.

திண்டுக்கல்

22—1—56ல், திண்டுக்கல் வட்டச்சாலைப் புதூரில் உள்ள முற்போக்கு இளைஞர் படிப்பகத்தின் பெயரை 'அண்ணா படிப்பகம்' என மாற்றும் பெயர்மாற்று விழாவும், திறப்பு விழாவும், படிப்பகச் சார்பில் பொங்கல். விழாவும் தோழர் பி. சமதர்மம் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. சுப்பையா கழகக் கொடியை ஏற்றி வைத்தார். தோழர் வீரராசன் அவர்களால் படிப்பகம் திறந்து வைக்கப்பட்டது. இறுதியில் செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மரமடக்கி

15—1—56ல் மரமடக்கி தி. மு கழகச் சார்பில் விழாக் கொண்டாடப்பட்டது. அன்று போட்டிப் பந்தயங்களும், கட்டுரைப் போட்டிகளும் நடைபெற்றன. விழாக் கூட்டம் மாலை 6 மணி அளவில் அண்ணா திடலில் தோழர் பெ. மு. சின்னையா தலைமையில் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தோழர் கு. மு. கருப்பையா கைத்தறி ஆடைகள் பரிசளித்தார். தோழர்கள் பி. எம். கணேசன், எம். தியாகராசன் ஆகியோர் தமிழர் திருநாள் என்பது குறித்துப் பேசினர்.

ஒரக்காட்டுப்பேட்டை

22—1—56 மாலை 6 மணிக்கு தோழர் கு. மு. இளங்கோ தலைமையில் நடைபெற்றது. தோழர் என். திருநாவுக்கரசு பொங்கல் விழா குறித்துப் பேசினர். பின்னர் தேவிகுளம், பீர்மேடு பற்றியத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்பு மாலை 8-லிருந்து 10 மணி வரைக்கும் தோழர் என். ஆறுமுகம் அவர்களால் இன்னிசை நடைபெற்றது. இரவு 10½ மணிக்கு இளங்கோ நாடக மன்றத்தினரின் 'கலிங்கப் போர்' 'நீதி தேவன் மயக்கம்' என்ற நாடகங்கள் நடைபெற்றன.

பெங்களூர்-இலக்குமணபுரி

14—1—56 காலை 7-30 மணியளவில், தோழர் ஜி. எஸ். அண்ணியப்பன் கழகக் கட்டிடத்தில் கொடியேற்றிவைத்தார். மாலை 5 மணியளவில் தோழர் வி. சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

திருப்பூர்

திருப்பூர் தி. மு. கழகம், தி. மா. மு. கழகம் ஆகியவற்றின் சார்பில் 16—1—56 மாலை 6 மணிக்கு, கொய்யல்நதி மைதானத்தில் நடைபெற்றது. பாரி குழுவினரின் இன்னிசை விருந்துடன் விழா ஆரம்பமாயிற்று. தோழர் மு முத்துரத்தினம் வரவேற்புரையாற்றினர். அடுத்துத் தோழர் ச். துரைசாமி தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பொங்கல் விழாவின் அவசியம் பற்றியும், தமது வடநாட்டுச் சுற்றுப் பயணம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

கரூர்

16—1—56 மாலை 6 மணிக்கு ஈசுவரன் கோவில் அருகில் உள்ள மைதானத்தில் விழாப் பொதுக் கூட்டம், தோழர் என். ஆர். இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் காவரசன், என். ரத்தினம் எம் எல் ஏ., ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் இரா. வைரப்பெருமாள் தலைமையில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கடம்பூர்

14—1—56 காலை 11 மணிக்கு, தோழர் இரா. முத்தமாலை தலைமையில் அண்ணாவின் உருவப் படம் இசை முழக்கங்களுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தின் போது, தோழர் மு. தானைமுத்து இல்லம், கட்டப்பொம்மு திடல், அழகிரி சதுக்கம் ஆகிய இடங்களில் கொடியேற்றப்பட்டது. கழகப் பணிமனையில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

வடவை

வடவைத் தமிழறிவு இயக்கத்தின் சார்பாக, 14—1—56 இரவு 8 மணிக்கு, தோழர் இரா. இரத்தினசாமி தலைமையில் விழாக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தின்போது, கத்தோலிக்க மதத்தவரிடையே 'பொங்கல் விழா நாத்திக விழா' என்று கருதப்பட்ட தவறான கருத்தை நீக்கி, பொங்கல் விழா மதச் சார்பற்ற தமிழர் விழாவென்று விளக்கம் கூறப்பட்டது. இறுதியில் இன்னிசையுடன் விழா முடிவுற்றது.

கடையநல்லூர்

17—1—56 இரவு மறுமலர்ச்சி திடலில், நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. ஆறுமுகம், எஸ். எஸ். சாகுல் அமீது, ப. புகழேந்தி ஆகியோர் பேசினர். முக்கியத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இறுதியில் தோழர் சி. பி. சிற்றரசு பேசியதும், கருணாநிதி கலா மன்றத்தினரின் 'சமுதாயப் புரட்சி' நாடகம் நடைபெற்றது.

தாயில்பட்டி

14—1—56ல், சிவகாசியை அடுத்த தாயில்பட்டி கிராம தி. மு. கழகச் சார்பில் தோழர். க. சுப்பிரமணியன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் வி. எஸ். கோமதி தமிழர்களின் பண்பு பற்றிப் பேசினர். தோழர்கள் வெ. மொட்டையன் தி. மு கழகக் கொடியை ஏற்றினர். கழகக் கொடிகளுடன் ஊர்வலம் நடைபெற்ற பின்னர், சிறுவர் சிறுமியர்களுக்கும் பெரியோர்களுக்கும் சர்க்கரைப் பொங்கல் கொடுக்கப்பட்டது.

தாத்தையங்கார்பேட்டை

13—1—56 மாலை 6 மணிக்கு, சந்தைத் திடலில் தோழர் எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ., தலைமையில் தோழர்கள் மு. பெ. முத்துக்கருப்பன், எம். எஸ். மணி, க. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மறுநாள் மாலை பேராசிரியர் இருதயராஜ் அரங்கில் இசை விருந்தும் இடையிடையே நடன நிகழ்ச்சிகளும், நகைச்சுவைக் காட்சிகளும் நடைபெற்றன. மறுநாள் இரவு 10 மணிக்கு, அழகிரி நாடக மன்றத்தாரால் 'வாழத் தெரிந்தவர்கள்' என்ற நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

நொச்சியூர்

மன்னார்குடி நொச்சியூர் கழகச் சார்பில் விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது. 14—1—56-ல் தோழர் அ. நாகமுத்து தலைமையில் தோழர் வை. பொன்னுசாமி தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

தி. மு. கழகப் பொதுக்குழு முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகம் கொண்ட நூல் ஒன்றை இரண்டாவது மாநில மாநாட்டில் வெளியிடுவதென்று இப்போதுக் குழு தீர்மானிப்பதுடன், அப்பணியினைச் செய்து முடிக்கும் பொறுப்பைத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் ஒப்படைப்பதென இப்போதுக் குழு தீர்மானிக்கிறது.

—என். எஸ். இளங்கோ
—இரா. சாம்பசிவம்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

7. (அ) திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் இயங்கிவரும் அமைப்பை, "திராவிட முன்னேற்றக் கழகம்—மாநில மாணவர் கிளை" என்று அழைப்பதென்பதோடு, மாணவர்களின் கல்வி நிலை எவ்வகையிலும் பாதிக்காதவகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட்பிரிவாக இயங்கிவருதல் வேண்டும் என்று 28-1-56 அன்று அண்ணாமலை நகரில் கூடிய திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழுவில் நிறைவேறிய தீர்மானத்தை இப்பொதுக் குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

(ஆ) திராவிட முன்னேற்றக் கழகம்—மாநில மாணவர் கிளையின் சட்டதிட்டங்களை வகுக்க, திராவிட முன்னேற்றக் கழக மாநில மாணவர் கிளையின் சட்டதிட்டக் குழுவினர், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களின் ஆலோசனையைப் பெற்று ஆவனசெய்ய வேண்டுமென இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

—கே. ஏ. மதியழகன்
—தில்லை-வில்லாளன்
—க. அறிவழகன்

தேசிய மயமான இன்ஷ்யூரன்ஸ்தொழில்

8. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை தேசிய மயமாக்கிய இந்திய அரசியலாரின் நடவடிக்கையை இப்பொதுக் குழு ஆதரித்து வரவேற்பதோடு, அந்தந்த வட்டாரத்தில் சேரும் இன்ஷ்யூரன்ஸ் தொகைகள், அந்தந்த வட்டாரத்தினுடைய வளர்ச்சித் திட்டங்களுக்காகவே கண்டிப்பாகச் செலவழிக்கப்பட வேண்டும் என்று இப்பொதுக் குழு இந்திய அரசியலாருக்கு வற்புறுத்திக் கூற விரும்புவதோடு, அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த ஊழியர்களையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

—முல்லை சத்தி
—இளம்பரிதி
—கண்ணதாசன்

சிங்கள ஆதிக்கத்திற்கு கண்டனம்

9. இலங்கையில் சிங்கள மொழி ஆதிக்க ஆட்சியாளர்கள் அங்குள்ள தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதோடு, சிங்கள மொழி ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த முயலும் போக்கினை இப்போதுக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அங்குள்ள தமிழர்களின்விருப்பங்களும், முயற்சிகளும் வெற்றி பெற வேண்டுமென்று இப்போதுக் குழு மனமார விரும்புவதுடன் தாய்த் தமிழகத்திலுள்ள தமிழர்கள் அனைவரும் தங்களாலான எல்லா ஆதரவையும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு அளிக்குமாறும் கேட்டுக்கொள்கிறது.

—மு. கருணாநிதி
—அ. பொன்னம்பலனார்

இந்திய ஆட்சி மொழி

10. இந்திய யூனியன் ஆட்சி மொழியும், மாநிலத்திற்கு மாநிலம் இருக்கவேண்டிய கடிதப் போக்கு - வரத்து மொழியும் எதுவாக இருக்க வேண்டும் என்று முடிவு எடுத்து, இந்திய அரசியலாரிடம் அதனை வற்புறுத்துவதற்கு என்று சென்னைத் தமிழ்க் கலைக் கழகத்தாரால் 28—1—56-ல் கூட்டப்பட்ட மாநாட்டில் பொதுச் செயலாளர் கலந்து கொண்டு மேற்கொண்ட நடவடிக்கைகளை இப்பொதுக் குழு ஆதரிப்பதோடு, இந்திய யூனியன் ஆட்சி மொழியும், மாநிலத்திற்கு மாநிலம் இருக்க வேண்டிய கடிதப் போக்கு வரத்து மொழியும் ஆங்கிலமாகவே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அந்த மாநாட்டினர் எடுத்த முடிவையும் முழுமனதோடு வரவேற்கிறது. அந்தந்த மாநில ஆட்சி அந்தந்த வட்டார மொழிகளிலேயே நடைபெற வேண்டும் என்ற கருத்தையும் இப்பொதுக் குழு வலியுறுத்திக் கூறுகிறது.

—ஆசைத்தம்பி
—நாஞ்சில் - கி. மனோகரன்
—பெங்களூர் - உசேன்

தமிழருக்கு அநீதி

11. மாநிலப் புது அமைப்புக் கென்று, இந்தியப் பேரரசால் நியமிக்கப்பட்ட பசில் அலிக் குழுவிடம், தமிழகம், ஆந்திரம், கர்னடகம், கேரளம் ,ஆகிய நான்கும் மொழி வழி பிரிந்து, இனவழி திராவிட தனிக் கூட்டாட்சியில் அமையவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் முன்பே வற்புறுத்திக் கூறியிருந்தும், திராவிடத்தைப் பொறுத்தும் சரி, பிற இந்தியத் துணைக்கண்டப் பகுதிகளைப் பொறுத்தும் சரி, மொழிவழி மாநிலம் என்ற நேர்மையான—நீதியான— ஜனநாயகத்திற்கு ஏற்றதான முறையை விட்டுவிட்டு, ஏதேதோ இடத்திற்கொரு முரண்பட்ட காரணங்களைக்காட்டி வீண் எல்லைத் தகராறுகளும், மொழிச் சண்டைகளும் ஏற்படுவதற்கு இடமளிக்கும்வகையில் அந்த பசில் அலிக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, ஏற்கவும் மறுக்கிறது.

(ஆ) பொதுவாகத் திராவிட மக்களின் உணர்ச்சியையும், குறிப்பாகத் தமிழ் மக்களின் உணர்ச்சியையும் கண்டறிந்து கொள்ள முடியாத பண்டித நேரு, அபுல் கலாம் ஆசாத், பண்டித பந்த், தேபார் ஆகிய நால்வரும் ஜனநாயகத்திற்கு முரணான வகையில் கூடி, மாநிலப்புது அமைப்பு பற்றி முடிவு எடுத்து, அதனைப் பண்டித நேரு அவர்கள், இந்திய அரசியலார் சார்பில் 'இறுதித் தீர்ப்பா'க வெளியிட்டதானது, ஜனநாயகத்திற்கு முற்றிலும் முரணான — சர்வாதிகாரப் போக்கு என்று கருதுவதுடன், பசில் அலிக் குழு தமிழ் மக்களுக்குச் செய்த அநீதியோடு, செங்கோட்டைத் தாலுகாவில் பாதியையும் தமிழகத்திலிருந்து பிரித்துத் தமிழ்மக்களுக்குப் பெரும் அநீதியை இழைத்த நேரு சர்க்காரை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) தமிழகத்தோடு தொடர்ந்தாற்போல், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சி–சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுகாக்களிலும் வடக்கே சித்தூர் மாவட்டத்திலும் உள்ள தமிழ்ப் பகுதிகளையும், பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகளையும் தமிழகத்தோடு இணைக்கவேண்டும் என்று இப்பொதுக்குழு தீர்மானிப்பதோடு, எல்லைத் தகராறுகளை, எல்லைக்குழு (கமிஷன்) அமைத்து ஜனநாயக முறையில் உடனடியாகத் தீர்க்கவேண்டுமென்றும், இந்திய அரசியலாரை இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

(ஈ) பசில் அலி குழுவிலும், பின்னர் இந்திய அரசியலாராலும், கேரளத்திலும் ஆந்திரத்திலும் சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைப்பதற்கு எல்லா ஜனநாயக முறைகளாலும் கிளர்ச்சி செய்து பாடுபடக்கூடிய சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு பொதுச் செயலாளர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை இப்பொதுக்குழு ஆதரிப்பதோடு, இனியும்தொடர்ந்து நடைபெறும் முயற்சிகளிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபடுவதற்கான வழிவகைகளை வகுக்கும் அதிகாரத்தை இப்பொதுக்குழு, பொதுச் செயலாளருக்கு அளிக்கிறது.

(உ) இதை ஒட்டி, பிப்ரவரி 20-ந் தேதி நடைபெற இருக்கும் பொது வேலை நிறுத்தத்தை இப்பொதுக் குழு முழுமனதோடு வரவேற்று ஆதரிக்கிறது.

—ஈ. வெ. கி. சம்பத்
—சத்தியவாணிமுத்து
—அலமேலு அப்பாதுரை

தட்சிணப் பிரதேச அமைப்பு எதிர்ப்பு

12. தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கும் மொழி வழியும தேவையான உரிமைகள், அதிகாரங்கள் வழியும் தனித் தனி மாநிலங்களாகப் பிரிந்து வடநாட்டுப் பிடிப்பு அறவே அற்று, ஒன்றுபடக்கூடிய குறைந்த அளவுத் திட்டங்களில் திராவிட கூட்டாட்சியாக இணைந்து வாழ வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாண்டுகளாகச் சொல்லிவரும் திட்டத்திற்கு முற்றிலும் நேர்முரணாக விளங்குவதாலும், தமிழர், கன்னடியர், மலையாளிகள் ஆகியவர்களிடையே சண்டை சச்சரவுகளை உண்டாக்கக் கூடியதாயிருப்பதாலும், பிரிட்டிஷ் ஆட்சியினர் தந்திரமாகக் கையாண்ட சூழ்ச்சியை மேலும் புதுப்பிப்பதாயிருப்பதாலும், வெள்ளைக்காரர் ஆட்சியின்போது ஏற்பட்டிருந்த அதிருப்தியைவிட மேலும் பன்மடங்கு மிகவான அதிருப்தியை வளர்ப்பதாயிருப்பதாலும், தட்சிணப் பிரதேச அமைப்பு (தென் மண்டலம்) என்ற யோசனையை இப்போதுக் குழு முற்றிலும் நிராகரிப்பதோடு, தமிழ் மாநில அமைப்புக்கும், தனித் திராவிடக் கூட்டாட்சி அமைப்புக்கும் மிக மிக ஊறு பயப்பதாகும் என்றும் இப்போதுக் குழு எடுத்துக் காட்டுகிறது.

—என். வி. நடராசன்
—எஸ். முத்து
—ஆர். பாலகுருசாமி

தேவிகுளம், பீர்மேடு பற்றி தி. மு. கழக விளக்கம்

★

31—1—56 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு

சென்னை-வண்ணை கல்லறை மைதானத்தில்

(கே. எஸ். பாண்டியன் திடல்)

கே. எஸ். அருணாசலம்

தலைமையில்

அண்ணா

காஞ்சி - கல்யாணசுந்தரம்

முகவை - ஆர். எஸ். பாண்டியன்

ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

★

இயக்கப் பாடல்கள் :

மதுரைத் தோழியர் **பி. எஸ். செல்வா** அவர்கள்

—சென்னை தி. மு. கழகம், 4-வது வட்டம்

தில்லையில் கழக முன்னணி........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாய் அமைந்திருந்தது என்றால் மிகையாகாது. பகல் உணவுக்காகத் தோழர்கள் கலைந்தபோது மாலை 3-30 மணி என்றால், விவாதம் எத்தகையதாகயிருந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாதா?

உணவுக்குப் பின் மாலை மீண்டும் 4-30 மணிக்குக் கூடி பொதுக் குழுவினர், தீர்க்கமான விவாதத்திற்குப் பின், தெளிவான முடிவுகள் பலவற்றை ஒருமனதாக மேற்கொண்டனர்.

பொதுச்செயலாளர் நன்றி நவில பொதுக் குழுக் கூட்டம் இனிது முடிந்தது.

பொதுக்குழு முடிந்து தோழர்கள் வெளிவந்தபோது, மண்டபத்திற்கு வெளியே முடிவுகளை அறிய ஆவலுடன் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர்; முடிவுகளை அறிந்து மகிழ்ந்தனர்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

பிப்ரவரி :

1 : சென்னை—புரசை
2 : அண்ணாமலைநகர் பல்கலைக் கழகத தமிழ் மன்றம்
3 : காலை: மதுரை (திருமணம்)
4 : பகல் : திருமயம் உயர்நிலைப் பள்ளி
மாலை : புதுக்கோட்டை அரசர் கல்லூரி
இரவு : தி. மா. மு கழகக் கூட்டம்
5 : காலை : நாமக்கல்— (ஆரம்ப ஆசிரியர் மாநாடு)
மாலை : கொப்பம்பட்டி (துறையில்) தி. மு. கழக திராவிடர் திருநாள்
12 : செங்கம் (வ ஆ) திருக்குறள் மாநாடு

கழகக் கூட்டம்

★

அறந்தாங்கி
வ. உ. சி. திடலில்
2—2—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
ஈ. வெ. கி. சம்பத்

கோதாவரி நதி படகு விபத்து எதிரொலி

சென்ற 13-ந் தேதியன்று அடிலாபாத் மாவட்டத்தில் முஜ்கி எனும் இடத்தில், கோதாவரி நதியில், 53 பேரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று திடீரெனக் கவிழ்ந்து 41 பேர் உயிரிழந்ததாக வந்த செய்தி நினைவிலிருக்கலாம்.

அந்த விபத்து பற்றி நடைபெற்ற விசாரணையின் இறுதியில், அப்படகில் 6 இடங்களில் ஓட்டைகள் விழுந்ததுதான் விபத்திற்கான காரணம் என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது.

முதலில் இவ்விபத்துப் பற்றிக் கேட்கப்பட்டபோது, படகில் அளவுக்கு மீறிப் பிரயாணிகளை ஏற்றிச் சென்றதால் பளு தாங்கமுடியாத காரணத்தால்தான் படகு கவிழ்ந்தது என்று கூறப்பட்டது நினைவிலிருக்கலாம்.

தற்போது இந்த விசாரணைக்குப் பின்னர் கூறப்பட்ட தீர்ப்பையொட்டி 8 பேர் மீது போலீசார் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

1—1—56 மாலை 7 மணிக்கு கிளைக் கழக இல்லத்தில் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். கழக ஆண்டு விழா குறித்து ஆராயப்படும்.

உடனடியாகத் தேவை

திருச்சி நகரில் 'நம் நாடு' விற்பனை செய்ய முன் பணம் கட்டக் கூடிய பொறுப்பு வாய்ந்த ஏசண்டு உடனே தேவை.

—பொறுப்பாளர்,
'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.